செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 12 நாள் : 5/1/18

## வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செய்திக் குறிப்பு

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 01.10.2012 முதல் 31.12.2012 வரையான காலாண்டில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து தற்போது ஐந்தாண்டுகள் முடிவு பெற்றுள்ள பட்டப்படிப்பு, மேல்நிலைக் கல்வி, பட்டயப்படிப்பு, எஸ்.எஸ்.எல்.சி, மற்றும் பள்ளி இறுதித் தேர்வு தேர்ச்சி பெறாதவர்கள் ஆகிய தகுதிகளை பதிவு செய்துள்ள இளைஞர்கள் நடப்புக் காலாண்டிற்கு உதவித்தொகை கோரி விண்ணப்பிக்க ஏதுவாக அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை வேலூர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பம் பெறுவதற்கு மாற்றுச் சான்றிதழ் உள்ளிட்ட அனைத்து அசல் கல்விச்சான்றுகள் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அடையாள அட்டை ஆகியவற்றுடன் வேலை நாட்களில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

### ஏற்கனவே வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற்று வருவோர் கவனத்திற்கு

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் வருவாய்த் துறையின் ஒட்டு மொத்த சான்றுடன் உதவித் தொகைக்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு கழித்து, இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டின் தொடக்கத்தில் 'பணியில் இல்லை' என்ற சுய உறுதி மொழி படிவத்தை அளிக்க வேண்டும்.

### நிர்ணயிக்கப்பட்ட சுய உறுதி மொழி படிவத்துடன்

நாளது தேதி வரையிலும் புதுப்பித்தல் செய்யப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு அடையாள அட்டை, வங்கி சேமிப்புக் கணக்குப் புத்தகம் மற்றும் பயனாளிகளின் வங்கி சேமிப்பு கணக்குடன் ஆதார் எண்ணையும் இணைத்து உறுதி செய்த பிறகு, அந்த ஆதார் அட்டை ஆகியவற்றின் போட்டோ நகல்கள் இணைக்கப்பட்டு நேரில் அல்லது அஞ்சல் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்க தவறினால் வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை உடனடியாக நிறுத்தப்படும்.

வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை பெற்று வரும் பயனாளிகள் தங்களது வேலைவாய்ப்பு பதிவு அடையாள அட்டையை உரிய காலத்தில் புதுப்பிக்க வேண்டும். அவ்வாறு புதுப்பித்தல் செய்த விவரத்தை தவறாமல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்கும் பிரிவில் தெரிவிக்க வேண்டும். வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவை புதுப்பிக்கத் தவறியவர்களின் உதவித்தொகை உடனடியாக நிறுத்தப்படும். வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை பெறுவதால் பதிவு ஏதும் ரத்தாகாது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் சி.அ.ராமன்., இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

3/1/18

மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர்-9.

செ.ம.தொ.அ. 05/1/18
வேலூர்-9.